2005 மார்ச் 30]

249—

சிற்றுந்துகள்

***28758—திரு. வெ. ஏழுமலை:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி நகரில் சிற்றுந்துகளின் உரிமையாளர்கள் அறிவிக்கப்பட்ட வழித்தடங்களில் அவற்றை இயக்காமல் அரசு பேருந்துகளுக்கு இடைஞ்சலாக இயக்கி அரசுக்கு நஷ்டம் உண்டாக்கி வருவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், தடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) செஞ்சி நகரில் தற்போது மொத்தம் ஏழு சிற்றுந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இந்த ஏழு சிற்றுந்துகள் முறைப்படி இயக்கப்பட்டு வருகின்றன என்றாலும், அனுமதிக்கப்பட்ட வழித்தடத்தில் இயக்காமல் தடம் மாற்றி இயக்கப்படும் நேரங்களில் அந்த வாகனங்களுக்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலரால் தணிக்கை அறிக்கை வழங்கப்பட்டு, வாகன உரிமையாளரிடம் இணக்கக் கட்டணமும் வசூலிக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

திரு. வெ. ஏழுமலை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிற்றுந்து உரிமையாளர்கள் அனுமதித்த வழித்தடங்களில் இயக்காமல் தவறுதலாக அவர்கள் விருப்பம்போல் இயக்குவதால் நகரப் பேருந்துகளில் வசூல் குறைகிறது. இதனால் நகரப் பேருந்து அந்த வழித்தடங்களில் இயக்குவதையே நிறுத்தும் நிலையை உருவாக்கி வருகிறார்கள். இதனால் பொது மக்கள் பெரிதும் கஷ்டப்படுகிறார்கள். எனவே அனுமதிக்கப்பட்ட வழித்தடங்களில்தான் சிற்றுந்துகள் இயக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்தப்படுமா என்பதை உங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏழுமலை அவர்கள் சொன்னதுபோல அந்த நிலையெல்லாம் கடந்த திராவிட முன்னேற்றக்*

கழக ஆட்சிக் காலத்திலே இருந்தது உண்மைதான். காரணம் அந்த ஆட்சியிலே அவர்கள் செல்லப் பிள்ளைகள்போல அவர்கள் இஷ்டத்திற்கு விருப்பம்போல் அந்த மினி பஸ் உரிமங்களைப் பயன்படுத்தி வந்தார்கள். அந்த நிலையை இப்போது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு கட்டுப்படுத்தி வந்ததற்குப் பின்பு விதிமுறை பிரகாரம் இயக்கப்பட வேண்டும் அல்லது அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று வலியுறுத்தி அதன்மூலமாக பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தமிழகத்தைப் பொறுத்தளவிலே ஆண்டுதோறும் பல்வேறு வாகனங்கள் சோதனை செய்யப்படுகின்றன. சென்ற ஆண்டுகூட 6,288 வாகனங்கள் சோதனை செய்யப்பட்டு தணிக்கை அறிக்கைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அதேபோல, அந்த 6,288 சோதனைகளிலும், இணக்கக் கட்டணமாக—அந்த வண்டிகளுக்கு இணக்கக் கட்டணமாக—fine—44,88,200 ரூபாய் வசூல் செய்யப்பட்டிருக்கிறது. இன்னும், நம்முடைய துறை அதிகாரிகளிடம் சொல்லி, மிகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதால், இப்போது அந்த நிலை இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல, ஏதோ இங்கொன்றும், அங்கொன்றுமாக, விதிமுறைகளுக்குப் புறம்பாக யாராவது அந்தமாதிரி இயக்குவார்களேயானால், அதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தால், உடனடியாக அவர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வெ. ஏழுமலை.

திரு. வெ. ஏழுமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய வழித் தடங்களில், சிற்றுந்துகளை இயக்க, அரசு அனுமதியளிக்க செயற்குறிப்பு ஏதாகிலும் அரசிடம் உள்ளதா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதிமுறைகளுக்குட்பட்டு, சட்டத்திற்குட்பட்டு, இப்போது அந்தந்த மாவட்டத்தில் அனுமதிக்கப்பட்ட சிற்றுந்துகளுக்குள்ள உரிமங்கள் கொடுப்பதற்கு வாய்ப்பு இருக்குமேயானால், அதுகுறித்து அரசு ஆய்வு செய்து, அந்தந்த மாவட்டங்களின் தகுதியின் அடிப்படையில், விதிமுறைகளுக்குட்பட்டு அந்த உரிமங்கள் வழங்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2005 மார்ச் 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. நடராஜன்.

திரு. வ. து. நடராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதங்களைத் தொட்டு வணங்கி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களிடம், என் தொகுதியில், 15 கிலோ மீட்டர், 20 கிலோ மீட்டர் தொலைவிலே, நடந்து செல்லமுடியாத அளவில் இருந்த சாலைகள் எல்லாம் தார்ச் சாலைகளாகப் போடப்பட்டிருக்கின்றன. அதிலே, புதிய வழித் தடங்கள் தொடங்கப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு ஆய்வு செய்து, உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 250, திரு. எஸ்.எஸ். ரமணீதரன், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

250—

சொந்தக் கட்டடம்

***37768—திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோபிசெட்டிப்பாளையத்திலுள்ள வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) கோபிசெட்டிப்பாளையம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட, அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலம் ஏதும் இல்லை. எனவே, வேறு தகுதியான தனியார் நிலம் கிடைக்கும்பட்சத்தில், நில எடுப்பு செய்து, அதன் பின்னர் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு, சொந்தக் கட்டடம் கட்ட உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.